අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ යොමුව<br>எனது இல.<br>My Ref. | ED/4/58/8/1/4/DOE (V) | ඔබේ යොමුව<br>உமது இல.<br>Your Ref. | | දිනය<br>திகதி<br>Date | 2025.08. |

.....................................

இ.க.நி.சே தரம் I

நேர்முகப் பரீட்சை இலக்கம் : ..........................................

அம்மணி/ ஐயா,

<u>**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் கல்விப் பணிப்பாளர்/ ஆணையாளர் பதவிகளுக்கு நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை - 2025**</u>

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய அச் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களிலிருந்து, கல்வி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் வெற்றிடங்கள் நிலவும் கல்விப் பணிப்பாளர்/ ஆணையாளர் பதவிகளுக்கு பொருத்தமான உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை 2025.09....... ம் திகதியன்று மு.ப 8.30 மணிக்கு பத்தரமுல்ல, இசுருபாய கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சில் நடைபெறும். அன்றைய தினம் கல்விச் செயலாளர் அலுவலகத்தின் கூட்ட அறை வளாகத்திற்கு (3ம் மாடி) சமூகமளிக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

02. அன்றைய தினம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிகள் மற்றும் அவ் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட நகல் பிரதிகளை கீழே இலக்கம் i முதல் xx முதல் இலக்க வரிசைப்படி தனித் தனியான இரண்டு கோவைகளில் இணைத்து தங்களது பெயர் மற்றும் நேர்முகப் பரீட்சை இலக்கத்தை கோவையின் முன் பக்கமாக குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சை சபையினரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

i. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம்
ii. தேசிய அடையாள அட்டை/ வெளிநாட்டு கடவுச் சீட்டு
iii. பிறப்புச் சான்றிதழ்
iv. முன்னிலைப்படுத்தும் சான்றிதழ்களில் பெயர் வித்தியாசங்கள் இருப்பின் அதற்கான சத்தியப் பிரமாண பிரகடனம்
v. முதல் நியமனக் கடிதம்
vi. நியமனத்தை நிரந்தரப்படுத்துவதற்கான கடிதம்
vii. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் II இற்கு பதவி உயர்வுக் கடிதம்
viii. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம்/ வகுப்பு I இற்கு பதவி உயர்வுக் கடிதம்
ix. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம்/ வகுப்பு I இல் கடமைகளைப் பொறுப்பேற்றமைக்கான கடிதம்
x. இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நியமனம் பெற்றுக் கொள்வதற்காக கருத்தில் கொள்ளப்பட்ட ஆரம்ப பட்டம்/ ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்/ போதனாவியல் டிப்ளோமா
xi. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் II இற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக கருத்தில் கொள்ளப்பட்ட கல்விமானிப் பட்டம்/ பட்டப் பின் கல்வி டிப்ளோமா/ கல்வி முகாமைத்துவம் அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பாடத்திற்குரிய பட்டப் பின் டிப்ளோமா அல்லது முதுமானிப் பட்டச் சான்றிதழ்
xii. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I இற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக கருத்தில் கொள்ளப்படும் பட்டப் பின் பட்டச் சான்றிதழ்
xiii. II வது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்பட்டமைக்காக வழங்கப்பட்ட கடிதம்

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister — +94112784832 | +94112784825 | minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary — +94112784811 | +94112785162 | secretary.education@moe.gov.lk | moesecretaryoffice@gmail.com

CamScanner

xiv. மேலே xiii விடுவிப்புக்குரிய கல்விமானி பட்டம்/ கல்வி முகாமைத்துவம் தொடர்பான உயர் டிப்ளோமா/ பட்டப் பின் டிப்ளோமா/ முதுமானிப் பட்டச் சான்றிதழ்

xv. ஆட்சேர்ப்பு, II வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விடுவிப்பதற்குரிய சான்றிதழ் மற்றும் தரங்களுக்கு பதவி உயர்வுக்காக கருத்தில் கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் தவிர்த்து புள்ளி வழங்கல் நியதி இலக்கம் 02 இற்கமைய பூர்த்தி செய்துள்ள ஏனைய கல்வித் தகைமைகள்

xvi. சேவைச் சான்றிதழ் (இ.க.நி.சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட திகதி முதல் விண்ணப்ப இறுதித் திகதி வரையில் வகித்த பதவிகள் மற்றும் ஒவ்வொரு பதவிகளையும் வகித்த காலப் பகுதிகளை தனித் தனியாக தனிப்பட்ட கோவைக்கமைய பெற்றுக் கொள்ள வேண்டும்)

xvii. மேலே xi, xii, xiv மற்றும் xv இல் குறிப்பிடப்பட்டுள்ள முதுமானிப் பட்டம்/ பட்டப் பின் டிப்ளோமாவிற்காக முன்னிலைப்படுத்திய ஆய்வு தவிர்த்து புள்ளி வழங்கல் திட்டத்தின் 3.1 நியதிகளின் கீழ் உரித்தாகும் ஏனைய ஆராய்ச்சிகள் (ஒவ்வொரு ஆராய்ச்சிகளதும் தலைப்பு உள்ளடக்கப்பட்ட பக்கம், ஆராய்ச்சி என்ன என்பதை தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள பக்கம், ஆராய்ச்சியாளர் என்ற வகையில் தங்களது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பக்கம், உரிய பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பக்கம் ஆகியவற்றின் பிரதியொன்றையும் கோவையில் இணைக்க வேண்டும் என்பதுடன் ஆராய்ச்சியை நேர்முகப் பரீட்சையின் போது கொண்டு வரல் வேண்டும்.

xviii. பாடப் புத்தகங்கள் மற்றும் அவை சார்ந்த வாசிப்பு நூல்கள் தவிர்த்து கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபையினால் அனுமதிக்கப்பட்ட வெளியீடுகள் (தலைப்புடன் கூடிய பக்கம், வெளியீடு எதற்கானது என்பதை தெளிவுபடுத்தி குறிப்பிடப்பட்டுள்ள பக்கம், எழுத்தாளர்/ வெளியீட்டாளர் தங்களது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பக்கம், கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபையினால் அனுமதிக்கப்பட்ட பக்கம் ஆகியவற்றின் பிரதிகளை கோவைக்கு இணைக்க வேண்டும் என்பதுடன் வெளியீட்டினை நேர்முகப் பரீட்சையின் போது கொண்டு வரல் வேண்டும்.

xix. கல்விசார் கையேடுகள், சஞ்சிகைகள், வார வெளியீடுகள், செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட தனி நபரின் செய்தியல்லாத வகையிலான கல்வித் துறைக்குரிய விடயங்களை உள்ளடக்கிய கல்விசார் கட்டுரைகள் அல்லது அறிக்கைகள் (தலைப்புடன் கூடிய பக்கம், வெளியீடு எதற்கானது என்பதை தெளிவுபடுத்தி குறிப்பிடப்பட்டுள்ள பக்கம், எழுத்தாளர் என்ற வகையில் தங்களது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பக்கம் ஆகியவற்றின் நகல் பிரதிகளை கோவையில் இணைக்க வேண்டும் என்பதுடன், உரிய வெளியீடுகளின் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது கொண்டு வரல் வேண்டும்.)

xx. புள்ளி வழங்கல் திட்டத்தில் இலக்கம் 06இற்கமைய முன்வைப்பின் அச்சுப் பிரதி (ஒரு பிரதி கோவையில் இணைக்கப்படல் வேண்டும்)

03. இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவது மாத்திரம் கல்விப் பணிப்பாளர்/ ஆணையாளர் பதவிக்கு நியமனம் பெற்றுக் கொள்வதற்கான உரித்தாகாது என்பதுடன், தற்போது வெற்றிடமாக உள்ள கல்விப் பணிப்பாளர்/ ஆணையாளர் பதவிகள் அனைத்திற்கும் உத்தியோகத்தர்களை நியமிக்கும் அல்லது பதவிகளில் சிலவற்றிற்கு மாத்திரம் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குரியது என்பதையும் வலியுறுத்தி தெரிவித்துக் கொள்கின்றேன்.

04. உரிய திகதியன்று நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளவில்லை எனின், அதற்காக வேறு திகதியொன்று வழங்கப்படமாட்டாது என்பதால் அத்தகைய கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதையும், உரிய ஆவணங்களை நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பத்தில் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும் என்பதையும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

05. நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வதற்காக பிரயாணச் செலவுகள் அல்லது வேறு எந்தவொரு கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது

ஒப்பம்:- நாலக களுவெவ
செயலாளர்

கே.கே.பீ ஆரியசிங்ஹ
மேலதிக செயலாளர் (கல்விச் சேவைகள் தாபனம்)



CamScanner